**அரசினர் பொறியியற் கல்லூரி, பர்கூர், கிருஷ்ணகிரி - 635 104.**

**சுற்றறிக்கை எண். 2222 / மா1 / 2022 நாள். 08.11.2022**

இப்பொறியியற் கல்லூரியில் 2022 - 2023ம் கல்வியாண்டில் முதலாம் ஆண்டில் சேர்ந்துள்ள மாணவ / மாணவிகள் அனைவரையும் இப்பயிலகத்தின் முதல்வர், ஆசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் சார்பாக அன்புடன் வரவேற்கிறோம். மாணவ / மாணவிகள் அனைவரும் அவரவர் தேர்ந்தெடுத்துள்ள துறைகளுக்கான பாடங்களை நன்கு கற்று தேர்வாகி வாழ்க்கையில் ஒரு நல்ல அங்கீகாரத்தை பெறவும் வாழ்த்துகிறோம்.

முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான வகுப்புகள் வரும் **14.11.2022** அன்று முதல் ஆரம்பிக்கப்பட உள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

விடுதியில் சேரவுள்ள மாணவர்கள் **13.11.2022** அன்று கல்லூரிக்கு வந்து விடுதியில் சேர்க்கை பெறலாம்.

விடுதியில் தங்கி பயில உள்ள மாணவ / மாணவிகள் அனைவரும் அதற்குண்டான அனைத்து முன்னேற்பாடுகளுடன் மற்றும் தேவையான உடமைகளையும் உடன் கொண்டு வர வேண்டும.

மேலும் **14.11.2022 காலை 10.00 மணி** அளவில் தேர்வு செய்யப்பட்டுள்ள முதலாம் ஆண்டு மாணவ / மாணவிகள் அனைவரும் பர்கூர், அரசினர் பொறியியற் கல்லூரி வளாகத்தில் உள்ள **கலையரங்கத்தில் (Auditorium)** தங்களின் பெற்றோருடன் தாமதமின்றி வருகை புரிய வேண்டும்.

அதனைத் தொடர்ந்து **14.11.2022 முதல் 26.11.2022** வரை நடைபெறும் அறிமுக வகுப்புகள் தொடக்க விழாவில் (Induction Programme) மாணவ / மாணவிகள் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும்.

இப்பயிலகத்தின் நற்பெயருக்கும், நல்ல அடையாளத்திற்கும் மாணவ / மாணவிகளான நீங்கள் அனைவரும் பின்வரும் நெறிமுறைகளை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும். அப்பொழுதுதான் ஒழுக்கமும், நற்பண்புகளும் மற்றும் சமத்துவமும் நிறைந்த சமுதாயத்தினை உருவாக்க முடியும்.

1. பயிலகத்திற்கு வருகை புரியும் மாணவ / மாணவிகள் அனைவரும் காலம் தவறாது உரிய நேரத்திற்குள் பயிலகத்திற்கு வருகை புரிய வேண்டும். பயிலகத்திற்கு வருகை புரிந்த பின்னர் எக்காரணத்தைக் கொண்டும் மாணவ / மாணவிகள் பயிலகத்திலிருந்து வெளியே செல்லக் கூடாது. மாலை வகுப்புகள் முடிந்த பின்னரே பயிலகத்தை விட்டு செல்ல வேண்டும்.

2. ஏதேனும் அவசர பணியின் காரணமாக விடுப்பு எடுக்க நேர்ந்தாலோ, வெளியில் செல்ல நேர்ந்தாலோ வகுப்பு ஆசிரியர் மற்றும் துறைத்தலைவரின் அனுமதி பெற வேண்டும்.

3. பயிலகத்திற்கு வருகை புரியும் மாணவ / மாணவிகள் நேர்த்தியான உடைகளை அணிந்து வரவேண்டும். மாணவர்கள் கட்டாயம் **ஷீ** (Shoe) அணிந்து வர வேண்டும்.

4. அணியும் உடைகள் சீராகவும், நேர்த்தியுடனும் தைக்கப்பட வேண்டும். மாணவர்கள் **ஜீன்ஸ் (Jeans)** உடைகளையும் மாணவிகள் லெகின்ஸ் (Leggins) உடைகளையும் அணிவதை தவிர்க்க வேண்டும்.

5. பயிலகத்திற்கு வருகை புரியம் மாணவ / மாணவிகள் தங்களுக்கு அளிக்கப்பட்ட **அடையாள அட்டையை (Identity Card)** கட்டாயம் அணிந்து வர வேண்டும்.

6. மாணவ / மாணவிகள் **சிகை அலங்காரத்தினை** முறையாக பராமரிக்க வேண்டும். அதிகப்படியாக சிகை அலங்காரங்களுடன் வரும் மாணவ / மாணவிகள் பயிலகத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

7. பேருந்து நிலையத்தில் இருந்து பயிலகத்திற்கு பேருந்தில் வரும் மாணவ / மாணவிகள் பேருந்தில் ஒழுக்கத்தினை கடைபிடிக்க வேண்டும். பேருந்து படிகளில் தொங்கிக் கொண்டு பயணம் செய்யக் கூடாது. பேருந்தில் பயணம் செய்யும் சக மாணவர்களிடம் கேலி, கிண்டல் செய்வது மற்றும் தவறான வார்த்தைகளை உபயோகிப்பதை தவிர்க்க வேண்டும்.

8. விடுதியில் தங்கி பயிலும் மாணவ / மாணவிகள் விடுதியின் **சட்ட திட்டங்களுக்கு** உட்பட்டு நடக்க வேண்டும்.

9. பயிலகத்திற்கு வரும் முன்னவரும் பயிலக நேரம் முடிந்த பின்னவரும் பயிலக வளாகத்தின் வெளியில் குழுவாக நின்று கொண்டு பேசுவதை தவிர்க்க வேண்டும்.

10. பயிலகத்திற்கு உள்ளேயும், வெளியேயும் சாதி, மத, பேதங்களை உருவாக்கும் விதத்தில் பேசவோ, செயல்படவோ கூடாது.

11. புகை பிடிப்பது மற்றும் **போதை பொருட்களை** கல்லூரி வளாகத்திற்குள்ளும், வெளியேயும் பயன்படுத்தக் கூடாது தவறும் பட்சத்தில் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். போதை பொருட்களை உபயோகப்படுத்தும் மாணவ / மாணவிகள் காவல்துறை வசம் ஒப்படைக்கப்படுவார்கள்.

12. பயிலக வளாகத்திற்கு உள்ளேயும், வெளியேயும் மாணவ / மாணவிகள் **பகடிவதையில்** கண்டிப்பாக (Ragging) ஈடுபடக்கூடாது. மீறுபவர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

13. கல்லூரி வளாகத்தினை தூய்மையாக வைத்திருக்க மாணவ / மாணவிகள் ஒத்துழைக்க வேண்டும், பயிலக வளாகத்திற்குள் கண்ட இடங்களில் குப்பைகளை போடுவதை தவிர்க்க வேண்டும். உணவருந்தும் இடங்களை தூய்மையாக வைக்க வேண்டும்.

14. கல்லூரி வளாகத்திற்குள் உள்ள அரசு சொத்துகளுக்கு சேதாரம் ஏற்படும் விதங்களில் செயல்படக்கூடாது. **நாற்காலி (Chair). மேசை (Table), குழல் விளக்கு (Tube Light), Swith, கதவு, ஜன்னல் கண்ணாடி மற்றும் தாழ்ப்பாள்** ஆகியவற்றினை சேதாரம் செய்யும் செயல்களில் ஈடுபடக்கூடாது. மேலும், கழிவறைகளை பயன்படுத்தும்போது சுத்தமாகவும் மற்றும் சுகாதாரமான முறையிலும் பயன்படுத்த அறிவுறுத்தப்படுகிறார்கள். மீறினால் கடும் நடவடிக்கைக்கு உள்ளாக நேரிடும் என தெரிவிக்கப்படுகிறது.

15. மாணவ / மாணவிகள் வகுப்பறைகளில் கைபேசியை பயன்படுத்தக் கூடாது.

16. மாணவ / மாணவிகள் ஆசிரியர்களின் கட்டளைகளுக்கு கட்டுப்பட்டு அவர்களின் கல்வி தொடர்பான அறிவுரைகளை பின்பற்றி நடந்து கொள்ள வேண்டும். ஆசிரியர்கள் தெரிவிக்கும் யோசனைகளை பின்பற்றி நடந்து அவர்கள் அளிக்கும் பாடங்களை அன்றாடம் படித்து தேர்வுகளில் சிறப்பாக எழுதி அனைத்து பாடங்களிலும் நல்ல மதிப்பெண்களை பெறுவதற்கு மாணவர்கள் முயற்சி செய்ய வேண்டும்.

17.மாணவர்கள் கல்வி நலனில் அக்கறை கொண்டு அரசு அளிக்கும் கல்வி உதவித்தொகைகளை பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். உதவித்தொகை பெறுவதற்கான விண்ணப்பங்களை அலுவலகத்தில் பெற்று அதனை சரியான முறையில் பூர்த்தி செய்து உரிய காலகெடுவுக்குள் அனைத்து உரிய சான்றிதழ்களுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

18. அலுவலகத்தில் கேட்கும் விவரங்களை மாணவர்கள் காலம் தாழ்த்தாமல் உடனடியாக அளிக்க வேண்டும். மாணவ / மாணவிகள் மிகவும் அத்தியாவசியமான **ஆதார் அட்டை (Aadhar Card), குடும்ப அட்ட(Ration Card), குடும்ப வருமான சான்று (Income Certificate), சாதிச்சான்று (Community Certificate), மாற்றுச் சான்று (Transfer Certificate), மதிப்பெண் சான்று (Mark Sheet), மற்றும் வங்கி கணக்கு விவரம் (Bank Pass Book),** ஆகியவற்றினை கட்டாயம் காலம் தாழ்த்தாமல் அலுவலகத்தில் கேட்கும் பொழுது சமர்ப்பிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது.

19. மாணவ / மாணவிகளின் வருகை விழுக்காடு 75% சதவீதத்திற்கு குறைவாக இருந்தால் பருவத்தேர்வுகளை (Semester Exam) எழுத இயலாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

20. மாணவ / மாணவிகள் **ஆண்டு கட்டணம் (Annual Fees)** மற்றும் **தேர்வுக் கட்டணம் (Exam Fees)** ஆகியவற்றினை உரிய காலத்திற்குள் தவறாது செலுத்த வேண்டு எனவும் அறிவுறுத்தப்படுகிறது. மாணவ / மாணவிகள் மேற்காணும் நெறிமுறைகளை தவறாமல் பின்பற்ற வேண்டு என அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

8/11/2022

முதல்வருக்காக

8/11/2022

பெறுநர்:-
அனைத்து முதலாம் ஆண்டு மாணவ / மாணவிகள்.

நகல்:
முதல்வர் மேசை
அனைத்துத் துறைத்தலைவர்கள்,
முதல்வரின் நேர்முக உதவியாளர்,
பொருளாளர்,
கண்காணிப்பாளர்,
அனைத்து துறை அறிவிப்புப் பலகைகள்,
இருப்புக் கோப்பு.